## கழக உடன்பிறப்புகள், தாய்மார்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்கிப் பணியாற்றுங்கள்!

# வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் டெல்லி அணியை தமிழ்நாட்டு மக்கள் ‘கிளீன் போல்ட்’ செய்வார்கள்!

## ஆண்டிமடத்தில் – அண்ணா, கலைஞர் சிலைகளைத் திறந்து வைத்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

**அரியலூர், மார்ச் 14-**

**அரியலூர் மாவட்டம், ஆண்டிமடத்தில் `தளபதி அன்பகம்’ என்று பெயரிடப்பட்டிருக்கும் ஒன்றியக் கழக அலுவலகக் கட்டடத்தையும், அங்கே நிறுவப்பட்டுள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகளையும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், ``டெல்லி அணியை எதிர்த்துத்தான் இன்றைக்கு நம் தலைவர் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியாக தி.மு.க. தலைமையிலான தமிழ்நாடு அணி களத்தில் நிற்கிறது. வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் டெல்லி அணியை ஒட்டுமொத்தமாக, தமிழ்நாட்டு மக்கள் `கிளீன் போல்ட்’ செய்வார்கள். அதற்கு கழக உடன்பிறப்புகள், இங்கு வந்திருக்கக்கூடிய தாய்மார்கள், நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்கி தீவிரமாக வேலை செய்ய வேண்டும் என்று கூறினார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை விவரம் வருமாறு:

இன்றைய தினம் கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள், தாய்மார்கள் உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். ஆண்டிமடத்தில் இன்று பேரறிஞர் ண்ணாவின் சிலையையும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் சிலையையும் திறந்து வைப்பதில், உண்மையில் மிகுந்த பெருமை கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், இன்றைய தினம் ஆண்டிமடம் ஒன்றியக் கழக அலுவலகங்களையும் உங்களின் முன்னிலையில் திறந்து வைத்துள்ளேன்.

### கலைஞரின் தியாக வரலாறு!

இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர், இந்த மண்ணின் மைந்தர் பெரியவர் ஐயா எஸ். சிவசுப்பிரமணியன் (எஸ்.எஸ். அவர்கள்) அவர்களின் சொந்த ஊரான தேவனூரில் அவரின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள நூலகத்தையும் திறந்து வைக்க இருக்கிறேன். தமிழ்நாடு முழுவதும் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் பல்வேறு இடங்களில் நாம் சிலையைத் திறந்து வைக்கிறோம் என்றால் என்ன அர்த்தம்? பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை, கலைஞரின் லட்சியங்களை நாம் அடுத்த தலைமுறைக்கும் கொண்டு செல்கிறோம் என்பதுதான் அதன் அர்த்தம்.

அதிலும் இந்த அரியலூர் மண் ஒரு சாதாரண மண் கிடையாது. தமிழ் உணர்வும் திராவிடக் கொள்கைகளும் ஆழமாக வேரூன்றி இருக்கக்கூடிய மண் இந்த அரியலூர் மண். இந்தித் திணிப்பை எதிர்த்துத் தன்னுயிர் தந்த கீழப்பழுவூர் சின்னசாமியைத் தந்த மண் இந்த அரியலூர் மண். கலைஞரின் பொது வாழ்க்கையில் அவரின் மிக மிக முக்கியமான ஒரு போராட்டம் என்றால் அது கல்லக்குடி இரயில் மறியல் போராட்டம். அந்தப் போராட்டத்தின் போது அவர் கைது செய்யப்பட்ட பொழுது, அவர் முதலில் அரியலூர் சிறையில்தான் அடைக்கப்பட்டிருந்தார். இப்படி கலைஞர் அவர்களின் தியாக வரலாறு எழுதிய அரியலூர் மண்ணுக்கு வந்திருப்பதை நான் உண்மையிலேயே மிகுந்த பெருமையாகக் கருதுகிறேன். பெரியவர் எஸ்.எஸ். அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுக்கு ஓர் இலக்கணமாக வாழ்ந்தவர். கலைஞர் அவர்களுக்கு மட்டுமே கட்டுப்பட்ட ஒரு தொண்டர் என்று அவரைப் பற்றி பெருமையாகச் சொல்வார்கள். தன் வாழ்நாள் முழுவதும் நம் திராவிட முன்னேற்றக் கழகம், கலைஞர், உடன்பிறப்புகள் என்றே வாழ்ந்தவர் ஐயா எஸ்.எஸ். அவர்கள்.

கழகத்துக்கு எத்தனை சோதனைகள் வந்தாலும், அவருக்கு எத்தனை சோதனைகள் வந்தாலும் அத்தனை சோதனைகளிலும் கலைஞருக்கு உறுதுணையாக இருந்தவர்தான் ஐயா எஸ்.எஸ். அவர்கள். இன்னும் சொல்லப்போனால், இந்த அரியலூர் மாவட்டத்தை உருவாக்கியவர் டாக்டர் கலைஞர். ஆனால், அதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் ஐயா எஸ்.எஸ். அவர்கள்தான்.

### ஒடுக்கப்பட்டவர்களின் முன்னேற்றம்!

தன் வாழ்நாள் முழுவதும் மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்காக ஐயா எஸ். எஸ். அவர்கள் பாடுபட்டார்கள். நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் ஐயா எஸ்.எஸ். அவர்கள் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய எஸ்.எஸ். அவர்கள் வாழ்ந்த இந்த ஆண்டிமடம் மண், இந்த அரியலூர் மாவட்டத்துக்கு முதன்முதலாக அமைச்சர் பொறுப்பைப் பெற்றுத் தந்த மண் இந்த அரியலூர் மண். கொடுத்தவர் நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள்தான்.

இன்றைய தினம் அண்ணன் சிவசங்கர் அவர்கள் போக்குவரத்துத் துறை, மின்சாரத் துறை என இரு பெரும் துறைகளுக்கு அமைச்சராகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பராமரிப்பு இல்லாமல் ஓடிய பேருந்துகளையெல்லாம் இன்றைக்குப் படிப்படியாக நவீனப் பேருந்துகளாக அண்ணன் அவர்கள் மாற்றிக் காட்டியிருக்கிறார். பேருந்து சேவையே இல்லாத குக்கிராமங்களுக்குக் கூடப் பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். பழைய பேருந்து பணிமனைகளையெல்லாம் இன்றைக்குப் புதியதாக மாற்றி அதை நவீனமயமாக்கிச் செயல்படுத்தி வருகிறார்.

### தளபதி அன்பகம்!

அண்ணன் சிவசங்கர் அவர்கள் அவரின் சொந்த ஊரான பக்கத்தில் இருக்கக்கூடிய தேவனூரில் ஐயா எஸ்.எஸ். அவர்களின் நினைவைப் போற்றுகின்ற வகையில் ஒரு நூலகத்தையும் கட்டியிருக்கிறார். அதேபோல் இங்கு `தளபதி அன்பகம்’ என ஒன்றியக் கழகத்துக்கு அலுவலகத்தையும் கட்டிக் கொடுத்திருக்கிறார். இதே மாதிரி அரியலூரில் கலைஞர் அறிவாலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டு, அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அரியலூர் மாவட்டக் கழகத்தை, கழகத்தின் இரும்புக் கோட்டையாக அமைச்சர் அண்ணன் சிவசங்கர் அவர்கள் மாற்றி வைத்துள்ளார். அதனால்தான் அண்ணன்



சிவசங்கர் அவர்களை நம் தலைவர் அவர்கள் அடிக்கடி, `அரியலூரின் அரிமான்’ என்று தலைவர் அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுப் பேசியிருக்கிறார்.

பல ஆண்டுகளாகப் பின்தங்கிய மாவட்டமாக இருந்த இந்த அரியலூர் மாவட்டம், நம் அரசு அமைந்த பிறகு வேகமாக வளர்ந்துள்ளது. சாலை வசதி, பேருந்து வசதி, சுகாதார வசதி என இந்த அரியலூர் மாவட்டத்தின் வளர்ச்சியை நம் தலைவர், முதலமைச்சர் அவர்கள் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் சென்றிருக்கிறார். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு குடும்பத்துக்கும் பயனளிக்கின்ற திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார். உதாரணமாக, மகளிருக்கு விடியல் பேருந்துத் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கு முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், கல்லூரி மாணவ மாணவிகளுக்குத் தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம். சமீபத்தில் 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவியருக்கு இலவச மடிக்கணினி வழங்கியிருக்கிறார் நம் முதலமைச்சர்.

### தடுத்து நிறுத்த முயற்சி!

இவை எல்லாவற்றிற்கும் மேலாகக் கடந்த மூன்று ஆண்டுகளாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் மூலம் ஒவ்வொரு மாதமும் ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். இந்தத் திட்டத்தைத்தான் நம் எதிரிகள், சங்கிக் கூட்டம் எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும், தேர்தலுக்கு முன்பு எப்படியாவது நிறுத்த வேண்டும் என்று பல மாநிலங்களில் நீதிமன்றத்திற்குச் சென்று நிறுத்தியிருக்கிறார்கள். அந்த முயற்சியை எடுத்தார்கள். ஆனால், நம் தலைவர் மூன்று மாதங்களுக்குச் சேர்த்து 3,000 ரூபாய், கோடைகால சிறப்பு நிதி 2,000 ரூபாய் என 5,000 ரூபாயை ஒரே நாளில் ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு, ஒரு கோடியே 32 லட்சம் குடும்பங்களுக்கு நம்முடைய முதலமைச்சர் தலைவர் அவர்கள் வழங்கியிருக்கிறார். இன்னொரு வாக்குறுதியும் கொடுத்திருக்கின்றார். திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப் போவது உறுதி. அப்படி அமைந்தவுடன் மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயை 2,000 ரூபாயாக நிச்சயம் உயர்த்திக் கொடுப்போம் என்ற வாக்குறுதியையும் கொடுத்திருக்கிறார்.

ஆனால் ஒன்றிய பாஜக அரசு என்ன செய்து கொண்டிருக்கிறது? தமிழ்நாட்டுக்கு எந்த நன்மையையும் செய்வது இல்லை, எந்தத் திட்டத்தையும் கொடுப்பது இல்லை, நாம் கேட்கின்ற நிதியையும் கொடுப்பது இல்லை.

### வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு!

அரசு கொண்டு வருகின்ற ஒவ்வொரு திட்டத்துக்கும் ஏதாவது ஓர் இடைஞ்சல் கொடுத்துக்கொண்டே இருக்கிறது ஒன்றிய அரசு. தமிழ்நாட்டுக்கான கல்வி நிதியைக் கொடுக்கவில்லை. 3,200 கோடி ரூபாய் இன்னும் கொடுக்கவில்லை. குடிநீர்த் திட்டம், சமீபத்தில் 100 நாள் வேலை வாய்ப்புத் திட்டம், அவற்றையும் இன்றைக்குத் தடுத்து நிறுத்துவதற்கான முயற்சியில் ஒன்றிய அரசு இறங்கியிருக்கிறது. நிதியும் கொடுப்பதில்லை, திட்டமும் கொடுப்பதில்லை. இன்றைக்குப் பாசிச பா.ஜ.க அரசால் சுரண்டப்படுகின்ற மாநிலமாக, வஞ்சிக்கப்படுகின்ற மாநிலமாக தமிழ்நாடு விளங்கி வருகிறது.

இந்த அநியாயத்திற்கெல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் துணைப்போகிறார். பா.ஜ.க-வுக்கு அ.தி.மு.க துணைப்போகிறது என்று கூடச் சொல்ல முடியாது. இன்றைக்கு பா.ஜ.க-வோடு அ.தி.மு.க ஒன்றுக்குள் ஒன்றாகக் கலந்து போய்விட்டது. வருகின்ற சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு, எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அ.தி.மு.க-வைப் பா.ஜ.க-வுடன் இணைத்துவிடுவார். ஏனெனில், இன்றைக்கு அவருக்கு அதைத் தவிர வேறு வழி கிடையாது.

### கலைஞரின் உடன்பிறப்புகள்!

இன்றைக்கு ஈ.டிசோதனை, சி.பி.ஐ. விசாரணை என்று சொல்லி, அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்களையெல்லாம் மிரட்டி அமித்ஷாவின் பிடியில் வைத்துள்ளார்கள். இதை தி.மு.க.விடமும் முயற்சி செய்யலாம் என்று முயற்சி செய்தார்கள். ஆனால், சி.பி.ஐ, ஈ.டி சோதனைகளுக்கெல்லாம் பயப்படுபவன் தி.மு.க தொண்டன் கிடையாது. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் பயப்படலாம், ஆனால், கலைஞரின் உடன்பிறப்புகள் எந்த உருட்டல் மிரட்டலுக்கும் பயப்பட மாட்டான்.

இன்றைக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்களை முதலமைச்சராக்குகின்ற எண்ணம் அமித்ஷாவுக்கு நிச்சயம் கிடையாது. பீகாரில் பார்த்திருப்பீர்கள், 10 முறை முதலமைச்சரான நிதிஷ்குமாரையே ஏமாற்றியிருக்கிறார்கள். அமித்ஷாவின் நோக்கம் அ.தி.மு.க-வை எப்படியாவது அபகரித்துவிடலாம் என்பதுதான். அப்படிப்பட்ட அ.தி.மு.க இன்றைக்கு அமித்ஷாவிடம் அடிமை அ.தி.மு.க-வாக மாறியுள்ளது. இப்படி ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும் இன்றைக்கு எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் டெல்லியிடம் நம் உரிமைகளை அடகு வைக்கப் பார்க்கிறார். அந்த டெல்லி அணியை எதிர்த்துத்தான் இன்றைக்கு நம்முடைய தலைவர் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி, தி.மு.க தலைமையிலான தமிழ்நாடு அணி களத்தில் நிற்கிறது. வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் டெல்லி அணியை ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டு மக்கள் `கிளீன் போல்ட்’ செய்வார்கள். அதற்கு கழக உடன்பிறப்புகள், இங்கு வந்திருக்கக்கூடிய தாய்மார்கள், நீங்கள் ஒவ்வொருவரும் களத்தில் இறங்கி தீவிரமாக வேலை செய்ய வேண்டும்.

### உரிமைகளைப் பாதுகாக்க!

நம் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை நீங்கள் மக்களிடம் கொண்டு சேருங்கள். பாசிச பா.ஜ.க-வால், அ.தி.மு.க-வால் தமிழ்நாட்டுக்கு ஏற்படுகின்ற ஆபத்துகளை மக்களுக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லுங்கள். பாசிச சக்திகளிடமிருந்து தமிழ்நாட்டைப் பாதுகாக்க, நம் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில்தான் ஆட்சி அமைத்து, நம்மால்தான் நம் மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும் முடியும்.

வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் குறைந்தது 200 தொகுதிகளில் நம் தலைவர் தலைமையிலான கூட்டணி நிச்சயம் வென்று காட்ட வேண்டும். அதற்கு இந்த அரியலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரியலூர், ஜெயங்கொண்டம் தொகுதிகள் ஒரு தொடக்கப் புள்ளியாக நிச்சயம் அமையும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

நம் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைக்க வேண்டும் என்றால், நம் தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், அடுத்து வருகின்ற 40 நாட்கள் களத்தில் இறங்கி இந்தப் பிரச்சாரத்தை நாம் செய்ய வேண்டும். அந்த உறுதிமொழியை இன்றைக்கு நம் பேரறிஞர் அண்ணாவின் சிலையின் முன்பு, டாக்டர் கலைஞரின் சிலையின் முன்பு நின்று அந்த உறுதிமொழியை நாம் ஏற்போம் என்று கூறி, இந்தச் சிறந்த வாய்ப்பைக் கொடுத்த அண்ணன் சிவசங்கர் அவர்களுக்கும், மாவட்டக் கழக நிர்வாகத்துக்கும், வரவேற்பு அளித்திருக்கக்கூடிய மாவட்டக் கழகத்துக்கும், பொதுமக்கள், தாய்மார்கள், இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் சகோதரர்களுக்கும், நண்பர்களுக்கும் மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்!

கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா, அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநிலச் சட்டத் திட்ட திருத்தக் குழுவின் இணைச் செயலாளர் சுபா சந்திரசேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் க.சொ.கா.கண்ணன், பிரபாகரன், மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் ஆனந்தகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பாலசுப்பிரமணியன், மாவட்டக் கழக நிர்வாகிகள் மு.கணேசன், லதா பாலு, சந்திரசேகரன், ராஜேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கலியபெருமாள், செந்தில்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தெய்வ இளையராஜன், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் வீரசிவா, சுபா வசந்தபகலவன், தமிழ்மாறன், குணசீலன், எஸ்.ஆர்.முருகேசன், தர்மராஜ் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.




கரூரில் இஃப்தார் நோன்பு திறக்கும் விழா கரூர் அக்தார் ஜமாத் ஈத்கா பள்ளிவாசலில் நடைபெற்றது. கரூர் மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், இஸ்லாமிய சகோதரர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முழுவதும் சமையல் எரிவாயு விநியோகம்

## தடையின்றி கிடைக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

### மக்களவையில் - தருமபுரி ஆ.மணி கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 14-

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் எல்.பி.ஜி.விநியோகநிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட வாரியாக எல்.பி.ஜி.விநியோக உரிமை பெற்றுள்ள நிறுவனங்கள் எண்ணிக்கை குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி நாடாளுமன்ற தொகுதிக்குள் உள்ள எல்.பி.ஜி சேவை விநியோகஸ்தர்களிடம் எண்ணிக்கை மற்றும் எல்.பி.ஜி இணைப்பு விநியோக பரப்பளவு குறித்த விவரங்கள் என்ன?



தருமபுரி மாவட்டத்தில் உள்ள பொதுமக்களுக்கு சமையல் எரிவாயு விநியோகம் மற்றும் ரீபில் சேவை கிடைக்க தாமதமோ, சிரமமோ ஏற்படும் பகுதிகளை ஒன்றிய அரசு அடையாளம் கண்டுள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டத்தில் சமையல் எரிவாயு விநியோகம், விநியோகஸ்தர்கள் அணுகல், விநியோக தடவாளங்கள், பாதுகாப்பு குறித்த ஏதேனும் குறைகளை ஒன்றிய அரசு பெற்றுள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன?

தருமபுரி மாவட்டம் உட்பட தமிழ்நாடு முழுவதும் அனைத்து வீடுகளுக்கும் சமையல் எரிவாயு விநியோக வலையமைப்புகளை வலுபடுத்தவும், சேவை விநியோகத்தை மேம்படுத்தவும், அனைவருக்கும் சமமான அணுகலை உறுதிப் படுத்தவும் ஒன்றிய அரசு ஏதேனும் இலக்கை நிர்ணயித்துள்ளதா? இருப்பின் அதன் விவரங்கள் என்ன? என்று மக்களவையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மாநில அமைச்சர் சுரேஷ் கோபியிடம் தருமபுரி எம்.பி.வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.